Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 100/2018

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Father/Husband Name | : நாச்சியப்பன் |
| Age | : | Calling | : |
| Date | : 09.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09 day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரி ஆஜர்

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது திருவாதவூர், சமத்துவபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அசா1 வளர்மதியின் கணவர் கருப்பையா மைத்துனர் முறை ஆவார். அசா1 வளர்மதி எனது மைத்துனரின் மனைவி ஆவார். அவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளது. சாட்சி காளிமுத்து எனது மனைவி ஆவார், ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்னர் இரவு சுமார் 08.00 முதல் 08.30 மணிக்குள் எனது மைத்துனர் மகன் விஜய் போன் செய்து அசா1 வளர்மதியை பின்னால் வீட்டுக்காரர்கள் கம்பியால் அடித்து அசா1 ரத்த வெள்ளத்தில் இருப்பதாக தகவல் சொன்னார்கள். நான் தகவல் கிடைத்த எனது மனைவி காளிமுத்துவுடன் சம்பவ இடத்திற்கு இரவு 09.00 மணிக்கு வந்துபார்த்தபோது அசா1 இரத்தகாயத்துடன் இருந்தார். அங்கிருந்தவர்களை விசாரித்தேன். அவர்கள் எதிரிகள் பால்பாண்டி, மணியாரம் ஆகியோர்கள் அசா1 யை அடித்ததாக சொன்னார்கள். சம்பவ இடத்தில் அசா1 ன் பிள்ளைகளும், ஊர்க்காரர்களும் இருந்தார்கள். நானும், எனது மனைவி காளிமுத்துவும் அசா1 யை அவரது பிள்ளைகளையும் ஆட்டோ முலம் மேலூர் அரசு மருத்துவமனைக்கு

அழைத்து சென்றோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக வேலம்மாள் மருத்துவமனையில் அனுமதித்தோம். வளர்மதி இதுசம்மந்தமாக வழக்கு கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் அசா5 யை மறுவிசாரணை செய்ய வாய்ப்பளித்து குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை. இத்துடன் குறுக்குவிசாரணை முடிததுவைக்கப்படுகிறது.

Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 100/2018

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : மீனாா | Father/Husband Name | : முத்தையாா |
| Age | : | Calling | : |
| Date | : 09.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09 day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரி ஆஜர்

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தாண்டவம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அசா1 வளர்மதி எனது கொழுந்தன் மனைவி ஆவார். எனது கொழுந்தன் வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார், அவர்களுக்கு விசித்ரா மகளும், விஜய் என்கிற மகனும் உள்ளார். சாட்சி பஞ்சு எனது மகள். ஆஜர் எதிரி எனது அண்ணன் மகள் என்ற வகையில் தெரியும். சுமார் 8 வருடத்திற்கு முன்னர் எனது மகள் பரமேஷ்வரிக்கு குழந்தை பிறந்திருந்ததால், எனது மகளின் வீட்டில் இருந்தேன். அப்போது எனது நாத்தனார் காளிமுத்து, வளர்மதி ரத்தத்துடன் இருந்தததை பார்த்து கத்தினார். சத்தம்கேட்டு போய் பார்த்தேன். வளர்மதி ரத்தக்காயத்துடன் இருந்ததை பார்த்தேன். அப்போது அங்கு வளர்மதியின் மகள் விசித்ரா, மகன் விஜய் அங்கு இருந்தார்கள். அங்கிருந்து வளர்மதியை மேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம், அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக வேலம்மாள் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். சம்பவத்திற்கு முன்னரே எதிரி குடும்பத்திற்கும், அசா1 வளர்மதி குடும்பத்திற்கும் அடிக்கடி சண்டை

ஏற்படும். போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் அசா4 யை பகுதியாக பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டு அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

அசா1 வளர்மதியிடம் யார் அவரை தாக்கினார்கள் என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் பால்பாண்டி அடித்ததாக சொன்னார். ஊரில் இருந்தவர்களிடம் யார் அசா1 வளர்மதியை தாக்கினார்கள் என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. எதிரிக்கும், அசா1 ற்கும் இடையே என்ன பிரச்சனை என்று தெரியுமா என்றால் தெரியாது. எதற்காக அசா1 யை எதிரி அடித்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எதை வைத்து எதிரி அசா1 யை அடித்தார் என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு முன்னர் இருந்தே எதிரிக்கும், அசா1 ற்கும் இடையே பிரச்சனை இருந்த விவரம் எனக்கு தெரியும் சம்பவத்தன்று அசா1 யை எதிரியை தாக்கிய விவரம் எனக்கு தெரியும், தற்போது தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி மணியாரம் யார் என்றால் ஆஜர் எதிரியின் தந்தை. ஆஜர் எதிரியும், அவரது தந்தை எதிரி மணியாரமும் சேர்ந்துதான் அசா1 யை தாக்கினார்கள் ஆனால் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி மணியாரம் எனக்கு அண்ணன் முறை என்றால் சரிதான், எதிரி பால்பாண்டி எனது அண்ணன் மகன் என்றால் சரிதான். அதனால்தான் சம்பவம் நடந்ததை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் அசா4 யை மறுவிசாரணை செய்ய வாய்ப்பளித்து குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை. இத்துடன் குறுக்குவிசாரணை முடிததுவைக்கப்படுகிறது.**